அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்
தேசிய மட்டத்திலான ”அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2021”
திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி □ பிறந்த ஆண்டு 2006 (வளர்நிலை9)

தெரிவுப்போட்டி: வளாகத்தில்  அன்னைத் தமிழ்முற்ற  இறுதிப்போட்டி: 27.03.2021  28.03.2021

---

1. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும். (50)

   *இல்லறத்தில் மனநிறைவுடன் ஈடுபட்டு, அறநெளிகளிலிருந்து பிசகாமல் வாழ்கின்றவன், தேவருள் ஒருவனாக வைத்துப் போற்றப்படுவான்.*

2. நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
   இல்லெனினும் ஈதலே நன்று. (222)
   *ஒருவனிடமிருந்து பொருளைப் பெறுவது என்பது நன்மையாகயிருந்தாலும் கொள்வது தீதாகும். மேலுலக வாழ்வு இல்லையென்றாலும் கூடப் பிறர்க்குக் கொடுப்பது நல்லது.*

3. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
   நல்விருந்து வானத் தவர்க்கு. (86)

   *தம்மை நாடிவரும் விருந்தினரை முகமலரப் பேணிச் சிறப்பித்து, வரக்கூடிய விருந்தினரை ஆவலுடன் எதிர்நோக்கிருப்பவன் வானுலகத்திலுள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினர் ஆவான்.*

4. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
   மெய்வருத்தக் கூலி தரும்.(619)

   *ஊழின் காரணத்தால் ஒருவேளை ஒரு செயலில் வெற்றி பெறாமல் போனாலும் கூட, முயற்சியின் அடிப்படையில் பாடுபட்ட பலன் கண்டிப்பாகக் கிடைத்தே தீரும்.*

5. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
   ஒன்னார் விழையும் சிறப்பு. (630)

   *தனக்கு வரும் துன்பத்தையே இன்பமாகக் கருதிக் கொண்டு சிறப்படைபவன், அவனுடைய பகைவராலும் நன்கு போற்றி மதிக்கப்படுவான்.*

□

6. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
   என்பும் உரியர் பிறர்க்கு. (72)

*அன்பிலாதவர் எல்லாப் பொருட்களையும் தமக்கே உடைமையாக்கிக் கொண்டு வாழ்வார். ஆனால் அன்புடையவரோ*

*தம் உடலைக்கூடப் பிறருக்கு உரியதாக்கி மகிழ்வர்.*

7. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடைய யான்கண் படின். (216)

*ஒப்புரவுள்ளவனிடம் சேரும் செல்வம் ஊரின் நடுவேயுள்ள பயன் மிகுந்த மரம், பழங்களால் நிறைந்து விளங்குவது போன்றதாம்.*

8. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. (1003)

*மற்றவர்களைவிடவும் அதிகமாகப் பணத்தைத் தேடிச் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமுடன், பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, புகழைத் தேடாதவன் பிறப்பு நிலத்திற்குப் பாரமான தாகும்.*

9. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. (1032)

உழு தொழிலை செய்யாது பிற தொழில்கள் செய்வார் யாவரையும் தாங்குதலால், உழுவார் உலகம் என்னும் தேருக்கு அச்சாணியாவார்.

10. கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்உடையர் கல்லா தவர்.(393)

கண்ணுடையவர் என்று பெருமையுடன் கூறப்படுபவர் கற்றோர்தான். கல்லாதவரோ முகத்தில் இரண்டு புண்ணுடையவராகக் கருதப்படுவர்.